2026.11.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்

01. ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் நிலைபேறான வர்த்தக மேம்பாட்டுக் கருத்திட்டத்தை அமுல்படுத்தல்

ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் நிலைபேறான வர்த்தக மேம்பாட்டுக் கருத்திட்டடத்தை அமுல்படுத்துவதற்காக ஐரோப்பிய ஒன்றியம் உடன்பாடு தெரிவித்துள்ளது. பசுமை நிலைமாற்று தொடக்க முயற்சிகள் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு தாங்குதிறன் கொண்ட வர்த்தக நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலம் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையிலான நிலைபேறான வர்த்தகத் தொடர்புகளைப் பலப்படுத்தல், வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான நிறுவன இயலளவுகளை அதிகரித்தல் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் சந்தைகளை அணுகுவதற்குத் தேவையான சர்வதேச தரநிர்ணயங்களுக்கு இணங்கியொழுகுவதை மேம்படுத்துவதற்காக இலங்கை எடுக்கின்ற முயற்சிகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குதல் போன்ற நோக்கங்களை அடைவதே இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சால் 04 ஆண்டுகளில் உத்தேச கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு 10 மில்லியன் யூரோக்களைப் பெற்றுக் கொள்வதற்கான நிதிக்கொடை ஒப்பந்தத்தில் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இலங்கைக்கும் இடையில் கையொப்பமிடுவதற்கு நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

02. அசர்பைஜான் மற்றும் இலங்கைக்கும் இடையிலான அரச சேவை வழங்கலில் புதிய பொறிமுறையொன்றை நிறுவுவதற்கான ஒத்துழைப்புக்கள் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம்

2026 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 05 மற்றும் 06 ஆம் திகதிகளில் அசர்பைஜானில் நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் ஆட்சிமுறைப் புத்தாக்க மாநாட்டுக்கு இணையாக அசைபர்ஜான் அரச சேவைகள் மற்றும் சமூகப் புத்தாக்கங்கள் தொடர்பான அரச நிறுவனம் மற்றும் இலங்கையின் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கும் இடையிலான அரச சேவை வழங்கல்களை நவீனமயப்படுத்தும் துறையில் ஒத்துழைப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. குறித்த துறைசார் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், வதிவிடப் பயிற்சிகளை நடாத்துதல் மற்றும் அதற்கான வசதியளித்தல்கள், தரப்பண்பான மற்றும் பயனுறுவாய்ந்த சேவை வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக கண்காணிப்புப் பொறிமுறையொன்றை நிறுவுதல் மற்றும் சேவைகளை மதிப்பீடு செய்தல் போன்ற நோக்களை அடைவதற்கு இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, 03 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும் வகையில் உத்தேச புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருதரப்பினர்களுக்கிடையில் கையொப்பமிடுவதற்கு பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

163, கிருலபன மாவத, கொළඹ 05, ශ්‍රී ලංකාව.
163, கிருலபன எவனியூ, கொழும்பு 05, இலங்கை.
163, Kirulapona Avenue, Colombo 05, Sri Lanka.
දු தொ T - (+94 11) 2515759
ෆැ பெ F - (+94 11) 2514753
ඊ மி E - dg@dgi.gov.lk
www.dgi.gov.lk
www.news.lk

03. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைச் சுகாதார விஞ்ஞான பீடத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடமொன்றை நிர்மாணித்தல்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைச் சுகாதார விஞ்ஞான பீடத்திற்கு நவீன வசதிகளுடன் கூடிய கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2025.09.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தகைமையுடைய ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்காக தேசிய போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 08 விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. அவ்விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர் உயர்மட்டப் பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரையின் அடிப்படையில், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Central Engineering Services (Pvt) Ltd இற்கு 2,025.73 மில்லியன் ரூபாய் தொகைக்கு (பெறுமதி சேர் வரி நீங்கலாக) குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக கௌரவ பிரதமர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

04. ஹமில்டன் கால்வாய் உள்ளிட்ட நீரியல் சுற்றாடலை, சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இடமாக அபிவிருத்தி செய்தல்

இயற்கையை மையமாகக் கொண்டதும் மற்றும் வரலாற்று ரீதியான மரபுரிமையை எடுத்துக்காட்டும் சுற்றுலாத்தள அபிவிருத்தியாக மேல் மாகாணத்தின் கடலோர மற்றும் கரையோரக் கால்வாயாக அமைந்துள்ள ஹமில்டன் கால்வாய், நீர்கொழும்பு களப்பு உள்ளிட்ட நீரியல் சுற்றாடலுக்கான அபிவிருத்திக் கருத்திட்டமாக அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்கீழ், மேல் மாகாண சபையால் கிங்ஸ் ஐலன்ட் இறங்குதுறையிலிருந்து (நீர்கொழும்பு களப்பு) மாஓயா முகத்துவரம் வரைக்கும் ஹமில்டன் கால்வாயை அபிவிருத்தி செய்து சுற்றுலாத்துறைக்குப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு கருத்திட்ட அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஹமில்டன் கால்வாய் கவர்ச்சிகரமான இடமாக அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம், 700 மில்லியன் ரூபாய்கள் செலவு மதிப்பீட்டின் கீழ், இலங்கை சுற்றுலாத்துறை மேம்பாட்டுப் பணியகத்தின் நிதியைப் பயன்படுத்தி அமுல்படுத்துவதற்காக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் மற்றும் பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் ஊள்ளூராட்சி அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

05. கண்டி – யாழ்ப்பாண வீதியின் (A09) வவுனியாவுக்கு அண்டிய வீதியை அகலப்படுத்தல் மற்றும் புனரமைத்தல்

தேசிய நெடுஞ்சாலைகளை அகலப்படுத்தல் மற்றும் புனரமைத்தல் வேலைத்திட்டத்தின் கீழ் கண்டி-யாழ்ப்பாண வீதியின் (A09) வவுனியா நகரத்திற்குக் குறுக்கே 176+000 தொடக்கம் 179+000 வரையான 03 கிலோமீற்றர் நீளமான வீதியை அகலப்படுத்தல் மற்றும் புனரமைப்பதற்கான ஒப்பந்தக்காரரை தேர்ந்தெடுப்பதற்காக தேசிய போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக 07 விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைகளின் அடிப்படையில், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான M/s Kanwel Constructions & Civil Engineering (Pvt) Ltd இற்கு 1,318.3 மில்லியன் ரூபாய்கள் தொகைக்கு (பெறுமதி சேர் வரி நீங்கலாக) குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

06. தித்வா புயல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை புனரமைத்தல்

தித்வா புயல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வீதிகள் சிலவற்றை மறுசீரமைப்புச் செய்தல் மற்றும் மேம்படுத்துவதற்கான ஒப்பந்தக்காரர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக தேசிய போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்குக் கிடைக்கப்பெற்ற விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், கீழ்க்காணும் வகையில் கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரர்களுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர் இலக்கம்	ஒப்பந்தம்	கிடைக்கப்பெற்ற விலைமனுக்களின் எண்ணிக்கை	விதந்துரைக்கப்பட்ட விலைமனுதாரர்	பெறுமதி (பெறுமதி சேர் வரி நீங்கலாக)
01.	கம்பளை – நாவலப்பிட்டி வீதியின் (AB013) கிலோமீற்றர் 8+500 கிலோமீற்றர் 16+300 வரை, உலபன – புஸ்ஸல்லாவ வீதியின் (B431) கிலோமீற்றர் 0+000 தொடக்கம் கிலோமீற்றர் 6+440 வரை மற்றும் அட்டபாகே – உலபன வீதியின் (B490) கிலோமீற்றர் 0+000 தொடக்கம் கிலோமிற்றர் 7+500 வரையான வீதிகளை மறுசீரமைப்பு செய்தல் மற்றும் மேம்படுத்தல்	04	M/s ELS Construction (Pvt) Ltd	852.83 மில்லியன் ரூபாய்கள்
02.	வத்தேகம – கந்தேநுவர – வாரியபொல வீதியின் (B461) கிலோமீற்றர் 11+000 தொடக்கம் கிலோமீற்றர் 27+700 வரையான கிலோமீற்றர் 16.77 நீளமான வீதியை புனரமைப்புச் செய்தல் மற்றும் மேம்படுத்தல் கிலோமீற்றர் 27+700 தொடக்கம் 30+800	02	M/s Jayasinghe Contractors (Pvt) Ltd	1,516.08 மில்லியன் ரூபாய்கள்

	வரையான வீதியின் வடிகாலமைப்பு வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் தடுப்புச் சுவர் (Retaining Walls) நிர்மாணித்தல்			
03.	கட்டுகஸ்தோட்டை – மடவல – பம்பரல்ல வீதியின் (B205) 19 ஆவது கிலோமீற்றர் தொடக்கம் 34 ஆவது கிலோமீற்றர் வரையான கிலோமீற்றர் 15 வீதி மற்றும் வத்தேகம – கந்தேநுவர – வாரியபொல வீதியின் (B461) 1 ஆவது கிலோமீற்றர் தொடக்கம் 5 ஆவது கிலோமீற்றர் வரையான 4 கிலோமீற்றர் வீதியில் சேதமடைந்த இடங்கள் மற்றும் மண்சரிவுகள் இடம்பெற்ற இடங்களை மறுசீரமைத்தல்களை மேற்கொள்ளல்	03	M/s RR Construction (Pvt) Ltd	965.37 மில்லியன் ரூபாய்கள்

07. றத்கம நகர அபிவிருத்திக் கருத்திட்டத்திற்குரிய காணி அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் கட்டமைப்பை மேம்படுத்தும் கருத்திட்டம்

தென் மாகாணத்தில் சுற்றுலாத்துறையில் கவர்ச்சிமிக்க காலி மற்றும் ஹிக்கடுவ போன்ற நகரங்களுக்கிடையே அமைந்துள்ள சேவை நகரமாக கருதப்படும் றத்கம நகரத்தைச் சுற்றி, முறையான வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வடிகாலமைப்புக் கட்டமைப்பு இன்மையால் வீதிகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகள் ஆண்டில் ஒருசில தடவைகள் வெள்ள அபாயத்திற்கு/அனர்த்தத்திற்கு உள்ளாகின்றது. குறித்த பிரச்சினைக்குத் தீர்வாக நகர அபிவிருத்தி அதிகாரசபையால் றத்கம புதிய நகர அபிவிருத்திக்கான கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த நகர அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கமைய ஏற்புடைய காணி அபிவிருத்தி மற்றும் வடிகாலமைப்புக் கட்டமைப்பை மேம்படுத்தும் கருத்திட்டம், இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் மூலம், 3,380.22 மில்லியன் ரூபாய்கள் தொகை (பெறுமதி சேர் வரி உள்ளடங்கலாக) மதிப்பீட்டுச் செலவின் கீழ், 2027-2029 காலப்பகுதியில் கீழ்வரும் கூறுகளுடன் அமுல்படுத்துவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது :

- றத்கம – தொடங்கொட வீதி மற்றும் விஜேரத்ன வீதிக்கிடையில் அமைந்துள்ள, இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தானத்திற்கு சுவீகரிக்கப்பட்டுள்ள 24.5 ஏக்கர்கள் (பயிரிடாமல்

கைவிடப்பட்டுள்ள) வயல் வெளியில் 13 ஏக்கர்களில் நீர்த்தடாகம் மற்றும் நீரேந்துப் பிரதேசத்தை நிர்மாணித்தல் மற்றும் எஞ்சிய காணியை அபிவிருத்தி செய்தல்.

- குறித்த 24.5 ஏக்கர்களில் வயல் வெளிக்குக் கீழ்ப்பகுதியின் 1.5 ஏக்கர் காணியை கையகப்படுத்தி மேலதிக மழைநீரை சரியான வகையில் றத்கம வாவிக்கு அனுப்புவதற்காக கால்வாய்க் கரைகளை அபிவிருத்தி செய்தல், பராமரிப்புக்கான அணுகல் வீதியை அமைத்தல், வடிகாலமைப்புக் கட்டமைப்பை மேம்படுத்தல் மற்றும் காணியை அபிவிருத்தி செய்தல்.

08. சிறுநீரக நோயாளர்களின் குருதிக் கூழ்மப்பிரிப்புக்குப் பயன்படுத்தப்படும் மருந்துடன் கூடிய பைகள் 1,100,000 விநியோகிப்பதற்கான பெறுகை

தீவிர அல்லது நீண்டகால சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்கு, குருதிக் கூழ்மப்பிரிப்பை மேற்கொள்கின்ற நோயாளர்களின் உடலிலிருந்து கழிவுகள் மற்றும் மேலதிக திரவத்தை அகற்றுவதற்காகப் பயன்படுத்தப்படும் மருந்துடன் கூடிய பைகள் 1,100,000 இனை விநியோகிப்பதற்காக சர்வதேச போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக இரண்டு (02) விலைமனுக்கள் கிடைக்கப்பட்டுள்ளன. குறித்த விலைமனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர், உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரைக்கமைய, கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான இலங்கையின் Infuxion Lanka (Private) Limited, (Manufacturer: Peritone Health SDN BHD, Malaysia) இற்கு 990 மில்லியள் ரூபாய்க்கு குறித்த பெறுகையை வழங்குவதற்காக சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

9. லயிபொசோமால் வகை எம்பொடெறிசின் பீ ஊசிமருந்து 50 மில்லிகிறாம் 54,000 குப்பிகளை விநியோகிப்பதற்கான பெறுகை

மூளையுறை அழற்சி (Cryptococcal meningitis) மற்றும் உள்ளுறுப்பு ஒட்டுண்ணித் தொற்று (Visceral leishmaniasis) உள்ளிட்ட உயிராபத்துக்களை ஏற்படுத்துகின்ற பங்கசு தொற்றுக்களுக்கு சிகிச்சை வழங்குவதற்காக பயன்படுத்தப்படும் லயிபொசோமால் வகை எம்பொடெறிசின் பீ ஊசிமருந்து 50 மில்லிகிறாம் 54,000 குப்பிகளை விநியோகிப்பதற்கான சர்வதேச போட்டிப் பெறுகை முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக மூன்று (03) விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரையின் அடிப்படையில், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான இந்தியாவின் Gufic Biosciences Ltd., (Manufacturer: Gufic Biosciences Ltd., India) இற்கு மொத்தச் செலவு மற்றும் போக்குவரத்துச் செலவு (விமானம் மூலம்) 702,000/- அமெரிக்க டொலர் தொகைக்கு வழங்குவதற்கு சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

10. வலப்பன புதிய நீதவான் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டத்தை மீண்டும் ஆரம்பித்தல்

முன்னர் வழங்கிய ஒப்பந்தக்காரர்களால் இடைநடுவில் கைவிடப்பட்டு நிறுத்தப்பட்டுள்ள, வலப்பன புதிய நீதவான் நீதிமனறக் கட்டிடத்தொகுதியை நிர்மாணிக்கும் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்காக 2025.06.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுப்பதற்காக தேசிய போட்டி பெறுகை முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன. அதற்காக ஆறு (06) விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர் உயர்மட்ட பெறுகைக் குழுவிக் விதந்துரையின் அடிப்படையில், வலப்பன புதிய நீதவான் நீதிமன்றக் கட்டிடத்தொகுதியை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தை 554.47 மில்லியன் ரூபாய்கள் தொகைக்கு (பெறுமதி சேர் வரி மற்றும் நிலையற்ற செலவுகள் நீங்கலாக) நவலோக கன்ஸ்ரக்சன் (தனியார்) கம்பனிக்கு வழங்குவதற்கு நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

11. சம்பூர் - கப்பல்துறை மின்கடத்தும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தை அமுல்படுத்தல்

சிறந்த மின்சக்திக் கட்டமைப்பை வினைத்திறனாகப் பேணிச் செல்வதற்குத் தேவையான மின்கடத்திக் கட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கு, ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் நிதி வசதியைப் பெற்றுக் கொண்டு அமுல்படுத்தப்படும் சம்பூர் - கப்பல்துறை மின்கடத்தும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் கீழ் சம்பூர் கிலோவாற்று 220(132)/33 சூரிய மின்சக்தி மின் உப நிலையத்தை நிர்மாணித்தல் மற்றும் கப்பல்துறை கிலோவாற்று 220(132)/33 சூரிய மின்சக்தி மின் உப நிலையத்தை விரிவாக்கம் செய்வதற்காக 2025.12.15 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒப்பந்தக்காரர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக சர்வதேச போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 06 விலைமனுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர் உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரையின் அடிப்படையில், கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான Joint Venture of Ceylex Engineering (Pvt.) Ltd and Xingneng Electric Power Construction Co. Ltd. இற்கு 4.15 மில்லியன் அமெரிக்க டொலர்கள், 0.78 மில்லியன் யூரோ மற்றும் 1,109.08 மில்லியன் இலங்கை ரூபாய்கள் தொகைக்கு (வரி நீங்கலாக) குறித்த ஒப்பந்தத்தை வழங்குவதற்காக வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

12. மெகாவாற்று 100/மெகாவாற்று மணித்தியாலயங்கள் 100 மின்கல வலுசக்தி சேமிப்புத் தொகுதியை அபிவிருத்தி செய்வதற்காக கொலன்னாவ உப மின் நிலையத்தை மேம்படுத்தல்

நீண்டகால மின்னுற்பத்தியை விரிவாக்கம் செய்யும் திட்டத்திற்கமைய, இலங்கையின் முதலாவது பயன்பாட்டு அளவு மின்கல சக்தி தொகுதியை (BESS) கொலன்னாவ உபமின் நிலையத்தை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, ஆசிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப்படும் நிதியைப் பயன்படுத்தி மின்சக்திக் கட்டமைப்பைப் பலப்படுத்தல் மற்றும் மீள்புதிப்பிக்கத்தக்க வலுசக்தியை ஒருங்கிணைக்கும் கருத்திட்டத்தின் கீழ் மெகாவாற்று 100/மெகாவாற்று மணித்தியாலயங்கள் 100 மின்கல வலுசக்தி சேமிப்புத் தொகுதியை அபிவிருத்தி செய்வதற்காக கொலன்னாவ உப மின் நிலையத்தை மேம்படுத்துவதற்காக 2024.09.02 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஒப்பந்தக்காரரைத் தேர்ந்தெடுப்பதற்காக சர்வதேச போட்டி விலைமுறிக் கோரல் முறையைக் கடைப்பிடித்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதுடன், அதற்கு 04 விலைமனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. குறித்த விலைமனுக்களை மதிப்பீடு செய்த பின்னர், உயர்மட்ட பெறுகைக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விதந்துரையின் அடிப்படையில் கணிசமான பதிலளிப்புக்களுடன் கூடிய குறைந்தபட்ச விலைமனுதாரரான Joint Venture of Ceylex Engineering (Pvt.) Ltd and Xingneng Electric Power Construction Co. Ltd. இற்கு 1.27 மில்லியன் அமெரிக்க டொலர்கள், 2.61 மில்லியன் யூரோ மற்றும் 555.13 மில்லியன் இலங்கை ரூபாய் தொகைக்கு (வரி நீங்கலாக) குறித்த ஒப்பந்தத்தை

வழங்குவதற்கு வலுசக்தி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

13. கொத்தணிக் குண்டுகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தின் கீழ் இலங்கையின் கடப்பாடுகளை வலுவாக்கம் செய்வதற்கான சட்ட ரீதியான ஏற்பாடுகளை வகுத்தல்

இலங்கை 2018.02.28 அன்று கொத்தணிக் குண்டுகள் தொடர்பான சர்வதேச சமவாயத்தில் (ஒஸ்லோ சமவாயம்) கையொப்பமிட்டுள்ளது. இச்சமவாயத்தின் கீழ் காணப்படுகின்ற கடப்பாடுகளை வலுவாக்கம் செய்வதற்குத் தேவையான சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக 2019.03.19 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்தல் அடிப்படைச் சட்டமூலத்திற்கு பல தடவைகள் வழங்கியுள்ள திருத்தங்களையும் உள்ளடக்கி, இச்சட்டமூலத்தை காலத்தோடு தழுவியதாக இற்றைப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த சட்டமூலத்திற்கு உட்சேர்ப்பதற்காக தற்போது அடையாளங் காணப்பட்டுள்ள திருத்தங்களை உள்வாங்கி கொத்தணிக் குண்டுகளைத் தடை செய்தல் சட்டமூலத்தைத் தயாரிப்பதற்காக சமகால அரசின் கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்காக பாதுகாப்பு அமைச்சராக கௌரவ ஜனாதிபதி அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

*****

தமிழ், ஆங்கில மொழிபெயர்ப்புக்களுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழியே மூலமாக அமையும்.